வாசகர் கடிதம்

என்னதான் நடக்குது இங்கே!

எங்களுக்குள்ளேயே எங்களின்றை ஆட்களைக் காட்டிக் குடுக்கிற சுயவாளித்தனங்கள் இங்கை நடக்குது. டக்கிளஸ், கருணா, சங்கரி என்ற துரோகம் ஒருபுறம் என்றால் இது இன்னொரு காட்டிக் கொடுப்பு.

இங்கு சில தமிழ் ஊடகங்கள் இருக்கினம் அவர்களுக்கு பல கொம்புகள் முளைச்சிருக்கு. அந்த ஊடகர்கள் தாங்கள் தனித்த சாதி என்று திரிகிறார்கள். அதுவும் உயர்சாதி என்ற நினைப்பு. அவர்களது உடையும் நடையும், சிரிப்பும், கனைப்பும்... தங்களை விட்டால் ஆட்கள் இல்லை என்ற வண்ணம் அவர்கள் திரிவார்கள்.

இந்த ஊடகர்கள் யார், மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்டவர்கள் தான். மக்களில் இருந்து வேறுப்பட்டவர்கள் அல்லர். ஆனால் இந்த ஊடகர்கள் மக்களை மந்தைகளாக நினைத்துத் தான் கடமையாற்றுகிறார்கள்.

தரராசிசிவராம், நிமலராஜன், நடேசன் ஆகிய ஊடகர்களை நினைத்துப் பார்க்கிறேன். மக்களுடன் நின்று மக்களுக்காகவே மரணித்தவர்கள். அவர்கள் மக்களை விட்டு விலத்திப் போகவில்லை. மக்களின் அன்றாட துன்ப துயரங்களைக் கண்டு வெந்தவர்கள், கொதித்தார்கள். தமிழ் மக்களின் இன்னல்களை தமது பேனாவால் உலகறியச் செய்தவர்கள். செத்தும் உலகறிய வைப்பவர்கள்.

சமீபத்தில் இலங்கையிலிருந்து ஒரு ஊடகர் இலண்டனுக்கு வந்திருந்தார். அவர் வந்ததே சிங்கள அரசின் தமிழ் ஊடகர் மீதான வன்முறையிலிருந்து தப்பவே. சிங்கள அரசால் அவருக்குக் கொலைப் பயமுறுத்தலும் இருந்தது.

அவர் இலண்டன் 'தீபம்' தொலைக்காட்சிக்கு செவ்வி அளிக்கையில் சொல்கிறார் 'ஊடக வியலாளருக்கு அரசாங்கத் தரப்பாலும் புலிகளாலும் அச்சுறுத்தல்' .

வலு சுலபமாகவும், மேலெழுந்த வரியாகவும் இவ்வாறு சொல்லி விட்டுப் போய் விடுவார்கள். இதனைக் கேட்கிற சாதரண பொதுமகன் என்ன நினைப்பான்? விடுதலைப் புலிகளையும், சிங்கள அரசையும் அவன் ஒரே தட்டில் வைப்பான். ஆனாலும் உண்மை அதுவல்ல. இந்த ஊடகர் ஏன் இப்படிச் சொல்கிறார் என்றால் தான் 'நடுநிலைமை' என்று ஊர் உலகத்துக்கு பறை சாற்ற. ஆருக்கு ஐயா வேண்டும் உந்த நடுநிலமை? நடுநிலைமை என்று எதுவும் இல்லை. மக்களின் பக்கம் நில்லுங்கள். அதுதான் ஊடகரின் கடமை.

இன்னொரு ஊடகரின் கதை இது. இந்த ஊடகர் இலண்டனில் இருந்து இயங்கும்'ஜீரீவி' யில் வேலை செய்கிறார். இந்த ஊடகர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா எம். பி.. கிஷோர் அவர்களைப் பேட்டி காண்கிறார். கிஷோர் அவர்கள் ஏனைய த. தே. கூ எம்பிக்களின் காலை வாருகிறார். தான் ஒருவன் தான் தனது தொகுதியில் இருக்கிறேன். ஏனைய எம்பிக்கள் தனது தொகுதியில் இருக்காமல் வெளிநாடு என்று சுற்றுகிறார்கள். இவர்கள் அடுத்த எலெக்சனுக்கு எப்படி மக்களிடம் வோட்டு கேட்பார்கள் என்று பல கேள்விகளை தனது கூட்டமைப்பு எம்பிக்களையே பப்ளிக்காகக் கேட்கிறார்.

கிஷோர் அப்படிச் சொல்கிறார் என்றால் அப்படிச் சொல்ல வைக்கிறார் அந்த ஊடகர். 'மக்கள் தரப்பு சொல்கிறார்கள்'. 'பொதுவான அபிப்பிராயம் இது' என்றெல்லாம் சொல்லி தனது நச்சுக் கருத்துக்களையே அந்த ஊடகர் முன்வைக்கிறார்.

அந்த ஊடகருக்கும் கிஷோர் எம்பிக்கும் மூன்று கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.

1) தொகுதியில் அல்லது மக்களுடன் அல்லது இலங்கையில் நின்ற ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன், சிவனேசன் ஆகிய தமிழ் எம். பிக்களுக்கு என்ன நடந்தது? அதையே ஏனைய த.தே. கூ. எம்பிக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று அந்த ஊடகரும், கிசோரும் நினைக்கிறார்களா?

2) வெளிநாடு என்று புறப்பட்ட த. தே. கூ எம்பிக்கள், சொகுசாக சுற்றுப் பயணம் செய்கிறார்கள் என்றா அந்த ஊடகரும் கிஷோர் எம்பியும் நினைகிறார்கள்? வெளிநாடுகளில் நிகழ்கின்ற எத்தனையோ எழுச்சி நிகழ்வுகள் த. தே. கூ எம்பிக்களால் தான் சாத்திய மாகிறது

உதரணத்துக்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டின் இப்போதைய எழுச்சிக்கு அங்கு இருந்த சிவாஜிலிங்கம் எம்பியும் காரணமாகிறார். இவையெல்லம அந்த ஊடகருக்குத் தெரியாதென்றல்ல. ''நான் ஊடகச் சாதி, உயர்ந்தவன்' என்று இறுமாப்பில்தான் இவர்கள் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள்.

3) உயிருக்குப் பயமென்றால் கிஷோர் எம்.பி ஏன் தனது தொகுதியிலேயே இருக்கிறார் என்ற கேள்வி எழலாம். கிஷோர் எம்பியூ. என்.பி சார்பாகவே எலெக்சனில் குதிக்க இருந்தார் என்ற தகவல் உங்களுக்குத் தெரியுமா? ஏதோ ஒரு 'அம்புக்குறி' அவர் பாதையைத் திருப்பி விட்டது.

வவுனியாவிலும், கொழும்பிலும், நுவரெலியாவிலும் பல இராணுவ அதிகாரிகளுக்குத் 'தண்ணிப்பார்ட்டி' வைத்துத் தான் தனது உயிரைத் தக்க வைத்திருக்கிறார் என்ற தகவல் கசிந்திருக்கிறதே! அது கூட அந்த ஊடகருக்குத் தெரியாதா?

இப்படியான ஊடகர்களே! ஒன்றும் தெரியாமல் மக்களுக்கு சேறடிக்க முயலாதீர்கள். த.தே.கூ எம்பிக்களில் பலர் தேசத்துக்கான சேவையை ஆற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு சிலர்தான் அடுத்த எலெக்சனுக்கு ஆயத்தமாகிறார்கள். ஊடகர்களே! உங்களுக்கு அகலக் கண்ணும் ஆழக் கண்ணும் நல்ல மனசும், தெளிவான மனமும் வேண்டும். வீணாக மக்களைக் குழப்பாதீர்கள்

- *பரதேசி*

திண்டுவிட்டுச் சாகட்டும் தமிழினம்

வன்னிக்குச் சோறு கொடு
இலங்கை வான்படைக்குக் குண்டு கொடு
திண்டுவிட்டுச் சாகட்டும் தமிழினம்
எண்டந்தப் பாவி சொன்னான்
முண்டப் பேதைகளாய்
இன்னும் முடங்கிக் கிடப்பாரோ
தமிழர் தமிழகத்தில் இல்லை
முண்டு பிடித்துத் தொடர்வாரோ
தம்போரை
பார்ப்பனியம் பணிவதில்லை
அது பணியவைத்து ஆள்வதுவே
என்றந்தப்பாவி சொன்னான்
இன்னமும் பொறுத்திடுமோ
தமிழிதை
இந்து மகாசதியும்
பௌத்த மதவெறியும்
இணைந்து நின்று தமிழைக்
கொல்வமெனச் சொல்கிறதே
இன்னும் என்ன தூக்கம்
என்னருமைத் தமிழகமே
நீ பொங்கியெழுந்தாலன்றி
மழையில் நனைந்ததிலே
பயனுண்டோ எண்ணிப்பார்.

- *பரதேசி*

கொடுமையடா சாமி!

கணவன் : இந்த வயசிலை பாம்பு கடிச்சுச் செத்துப் போச்சுதாம்

மனைவி : யாரப்பா

கணவன் : வன்னியிலை எங்கடை பக்கத்து வீட்டிலை இருந்த கமலம் அக்கா தான்.

மனைவி : எட அவவே. 'கோலங்களிலை' வாற அபியாக்கும் எண்டு நினைச்சு நான் பயந்து போனன்

We are urgently looking for properties with1, 2, 3 bedrooms in Mitcham and Morden Area !

வீடுகள் வாங்க விற்க வாடகைக்குவிட மற்றும் அனைத்து வீத வீட்டுக்கடன் வசதிகளுக்கும் உடனே நாடுங்கள்

House Mortgages Up to 95%
Commercial Loan up to 90%
Insurance 100% cash back guarantee

http://www.matrixproperties.co.uk

Mitcham,Morden பகுதிகளில் 1, 2, 3 படுக்கையறைகள் கொண்ட வீட்டுமனைகள் உடனடியாகத்தேவைப்படுகின்றன

| Sales | Lettings | Mortgages | Insurance | Commercial Loans |

MATRIX
PROPERTIES SERVICES LTD

159, London Road, Mitcham, Surrey, CR4 2JB.
Tel: 020 8687 1700 / 020 8687 1001| Mob: 07958 527 830
Fax: 020 8687 1441 | Email: Contact@matrixproperties.co.uk